**CC.NO: 970/2022/ P.W1- கருப்பசாமி Cross (சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை) Date : 10.12.2024**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. சம்பவம் நடந்த பின்னர் நான் மருத்துவமனைக்கு சென்றேன். வீட்டிற்கு செல்லவில்லை. சம்பவத்தின் போது நான் அணிந்திருந்த சட்டை மற்றும் பனியன் கிழிந்திருந்தது என்றால் சரிதான். மேற்படி கிழிந்த பனியன் மற்றும் சட்டையை போலீஸாரிடம் நான் ஒப்படைக்கவில்லை. மருத்துவமனைக்கு சென்ற போது நடந்து சென்றேனா அல்லது தூக்கி சென்றார்களா என்றால் எவ்வாறு சென்றேன் என்று தெரியவில்லை. சம்பவத்தின் போது எதிரி இடது கையால் எனது நடு மார்பு பகுதியில் என்னை குத்தினார். எந்த கையால் எதிரி எனது சட்டையை பிடித்தார் என்று ஞாபகமில்லை, ஆனால் சட்டையை பிடித்தார்.

2. எனக்கும், எனது மனைவிக்கும் சண்டை வந்து கம்பால் அவரை அடித்தேன் என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. அடிப்பட்ட எனது மனைவியை எதிரியின் மனைவி அழைத்து சென்று ஆசுவாசபடுத்தி ஒத்தலம் கொடுத்தார் என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. அதனால் எதிரியை சந்தித்து எனது மனைவிக்கு நீ எவ்வாறு உதவி செய்யலாம் என சண்டைக்கு சென்றேன் என்றால்சரியல்ல. மேற்படி பிரச்சனை காரணமாக எதிரியை பழிவாங்கும் நோக்கில் இவ்வழக்கு கொடுத்தேன் என்றால்சரியல்ல. எனது மனைவி வேலம்மாள் 100 நாள் வேலைக்கு செல்கிறாள். எனது மனைவி வேலைக்கு செல்லாமல் 100 நாள் வேலை வாய்ப்பில் சம்பளம் வாங்கினாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. சம்பவம் நடந்த 21.07.2022 முதல் 27.07.2022ம் தேதி வரை எனது மனைவி 100 நாள் வேலைக்கு சென்றாரா என்றால் தேதி சரியாக ஞாபகமில்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை

என்றும் காவல்நிலையத்திற்கு சென்ற என்னிடம் சார்பு ஆய்வாளர் சரவணக்குமார் என்னை மருத்துவமனையில் சென்று சேரும் மாறும் அவ்வாறு சேர்ந்தால் தான் வழக்கு பதிவு செய்யப்படும் என கூறியதன் பேரில் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால்சரியல்ல. எதிரியின் வீட்டிற்கு முன்பு கழிவு நீர் தேங்கியது சம்மந்தமாக நாங்கள் அனைவரும் சேர்ந்து புகார் கொடுத்தோம். மேற்படி புகாரை சார்பு ஆய்வாளர் சரவணக்குமார் விசாரித்தார் என்பது எனக்கு தெரியாது. சார்பு ஆய்வாளர் எதிரியை மேற்படி புகார் சம்மந்தமாக விசாரித்தார் என்றும், சார்பு ஆய்வாளர் பேச்சை எதிரி கேட்கவில்லை என்பதால் எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்சரியல்ல.

4. 21.07.2022ம் தேதி நான் புகார் மனுவில் கூறியுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அது பொய் புகார் என்பதால் தான் சம்பவஇடம் மற்றும் சம்பவ நேரத்தை மாறி மாறி சொல்கிறேன் என்றால்சரியல்ல. ஏற்கனவே உள்ள பிரச்சனை காரணமாக நானும், சார்பு ஆய்வாளர் சரவண குமார் மற்றும் பார்த்திபன் ஆகியோர் சதி திட்டம் செய்து எதிரி மீது பொய்யாக இவ்வழக்கை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கு நுண்கதிர் படம் மற்றும் ஸ்கேன் எடுத்தார்கள். எனக்கு உடலில் எந்த பாதிப்புமில்லாமல் செல்வாக்கை பயன்படுத்தி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல. எனது தெருவில் கழிவு நீர் தேங்கியிருந்தது குறித்து எதிரியின் மாமனார் இராமமூர்த்தி சிவில் வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. பொய் புகார் என்ற காரணத்தினால் தான் எதிரி என்னை அடித்து உமை காயம் ஏற்பட்டதாக முதல் விசாரணையிலும், இரத்த காயம் ஏற்பட்டதாக குறுக்கு விசாரணையிலும் முன்னுக்கு பின் முரணமாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.